
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1239

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# 'மைனாரிட்டி' தி.மு.க.

**மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா**

69

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

**"நான் உங்கள் வீட்டுப்பிள்ளை**
**இது ஊர் அறிந்த உண்மை**
**நான் செல்லுகின்ற பாதை**
**பேரறிஞர் காட்டும் பாதை"**

என்ற திரைப்படப் பாடல் இன்றைக்கும் புகழ்பெற்றது. இந்தப் பாடல் இடம்பெற்ற திரைப்படம், **'புதிய பூமி'**. 1968-இல் எம்.ஜி.ஆர். நடிப்பில் வெளியான இத்திரைப் படம் நேரடியாக அரசியலைப் பேசவில்லை என்றாலும், அரசியலுக்காக வெளிவந்த படம். 1967-இல் தி.மு.கழகம் ஆட்சிக்கு வந்த பின்பு, முதன்முதலாக தென்காசி தொகுதிக்குத் தான் இடைத்தேர்தல் நடைபெற்றது. அத்தொகுதியில் வெற்றிபெற்றிருந்த காங்கிரஸ் வேட்பாளர் சிதம்பரம், 1968-இல் காலமானார். இதையடுத்து, அத்தொகுதிக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது. இந்தத் தேர்தலுக்கும் அத்திரைப்படத்திற்கும் ஒரு முக்கியமான தொடர்பு இருக்கிறது.

அந்தத் தேர்தலில் கழக வேட்பாளருக்கு ஆதரவாக, முத்தமிழறிஞர் கலைஞர் உட்பட எட்டு அமைச்சர்கள் தென்காசிக்குச் சென்று தீவிரமாகக் களப்பணியாற்றினர். வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரித்தனர். அப்போது, செங்கோட்டையில் நடந்த பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய பேரறிஞர் அண்ணா, "ஒரு விருந்தில் இலை விரித்து அறுசுவைப் பண்டங்களையும் வைத்திருப்பது போல், தமிழக மக்கள் தி.மு.க.வுக்கு ஆட்சி என்ற விருந்தை அளித்திருக்கிறீர்கள். அதில் இந்த இடைத்தேர்தல் வெற்றி என்பது ஊறுகாய் போன்றது. அறுசுவை விருந்தில் ஊறுகாய் இல்லாவிட்டால் எப்படி இருக்கும்?" என்று கூறி, தி.மு.கழக வேட்பாளரின் வெற்றி எவ்வளவு முக்கியமானது என்பதை எடுத்துச் சொல்லி வாக்கு சேகரித்தார்.

இறுதியில், இந்த இடைத்தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் வெற்றியும் பெற்றார். இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றிக்கு உரித்தான வர் கா.மு.கதிரவன் என்கிற சம்சுதீன். 'புதிய பூமி' திரைப்படத்தில் எம்.ஜி.ஆர். நடித்த கதாபாத்திரத்தின் பெயர், கதிரவன். படத்தின் இறுதியில் கதிரவனின் அம்மா (பண்டரிபாய்), 'என் மகன் கதிரவனுக்கு இனிமே எங்கேயும் எதிலேயும் வெற்றிதான்' என்று ஆசீர்வதிப்பார். படத்திற்காக வைக்கப்பட்ட அந்த வசனம், இடைத்தேர்தல் முடிவில் எதிரொலித்தது.

1967-ஆம் ஆண்டு தேர்தலில் தென்காசி தொகுதியின் வேட்பாளராக அண்ணாவால் களமிறக்கப்பட்டவர் சம்சுதீன். ஆனால், 743 வாக்குகள் குறைவாகப் பெற்று தோல்வியைத் தழுவிய அவர், மீண்டும் இடைத்தேர்தலிலும் அண்ணாவால் வாய்ப்பு வழங்கப்பட்டு, சட்டமன்றத்தில் காலெடுத்து வைத்தார். அந்த வாய்ப்புகளுக்குக் காரணம், அவர் இஸ்லாமியர் என்பதால் மட்டுமல்ல, இயக்கத் தையே முதன்மையாகக் கொண்டு மற்ற எல்லாவற்றையும் பின்னுக்குத் தள்ளிய களப்போராளி அவர்.

## வசதியான குடும்பப் பின்புலம்

1935-ஆம் ஆண்டு ஏப்ரல் 25-ஆம் நாள், செங்கோட்டையை அடுத்த வல்லத்தில் முஹமது முஸ்தபா - வெள்ளி இஸ்மாயில் பீவி தம்பதிக்கு மகனாகப் பிறந்தவர் சம்சுதீன். தேயிலைத் தோட்டம், பனைத்தோட்டம் கொண்டிருந்த வசதியான குடும்பத்தில் பிறந்தவர். இடையன்குடி கால்டுவெல் உயர்நிலைப் பள்ளியில் படித்தபோது அரசியல் ஆர்வம் துளிர்விட்டது. அப்போது, பள்ளி மாணவர் தலைவராகவும் இவர் இருந்துள்ளார். வெளிநாட்டு கார் வைத்திருக்கும் அளவுக்கு வசதியாக இருந்த அவருக்கு, வசதி வாய்ப்புகளை அனுபவிப்பதைவிட, கழக அரசியலுக்காக வாழ்வதையே முதன்மை நோக்கமாகக் கொண்டிருந்தார். கழகத்தின் மு.க.வின் கேசவ ஆதித்தனிடம் வெற்றி வாய்ப்பை இழந்தார். கா.மு.கதிரவனுக்கு சம்பந்தம் இல்லாத தொகுதி என்றாலும் கூட, அ.தி.மு.க. வேட்பாளர் அவரை வீழ்த்த மிகுந்த போராட்டங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. வெற்றிபெற்ற அ.தி.மு.க. வேட்பாளர் வாங்கிய வாக்குகளின் எண்ணிக்கை 35,499. ஆனால், தோல்வியுற்ற கா.மு.கதிரவன் பெற்ற வாக்குகளோ 34,294. வெறும் 1,205 வாக்குகளில்தான் வெற்றிவாய்ப்பை இழந்திருந்தார். 1989-இல், கடையநல்லூரில் போட்டியிட்டு வெற்றிபெற்ற கா.மு.கதிரவனை சட்டமன்றக் கொறடாவாக்கினார் கலைஞர்.

அண்ணாவிடமும், கலைஞரிடமும் இத்தகைய வாய்ப்புகளை அவர் தொடர்ச்சி யாகப் பெறக்காரணமாக இருந்தது, அவருடைய




# கா.மு.கதிரவன் (எ) சம்சுதீன்
# கழகத்திற்காக உழைப்பதே முதல் கடமை!

தமிழ்ப் பற்றில் ஊறிப்போன அவர், தன் பெயரையே கதிரவன் என மாற்றிக்கொண்டார்.

நெல்லை மாவட்ட தி.மு.கழக மாநாடு 1959-ஆம் ஆண்டு மே மாதம் 16, 17 ஆகிய தேதிகளில், தென்காசியில் கே.வி.கே.சாமி பந்தலில், தாளமுத்து அரங்கில் நடைபெற்றது. என்.வி.நடராசன் தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டிற்கு உழைத்தவர்களில் முக்கிய மானவர், கா.மு.கதிரவன். அண்ணா, கலைஞர், நாவலர் என கழகத்தின் முன்னணி தளகர்த்தர்கள் பங்கேற்றுப் பேசிய மாநாடு என்பதால், தனது சீரிய களப்பணிகளால் அண்ணாவின் கவனத்தை அப்போதே ஈர்த்திருந்தார், கா.மு.கதிரவன்.

அண்ணாவின் மறைவுக்குப் பின்பு கலைஞரிடம் அதே அன்பைப் பெற்றிருந்தார். அதன் காரணமாகத்தான், 1971-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலிலும் தென்காசி தொகுதியில் போட்டியிடும் வாய்ப்பைப் பெற்றார். அடுத்த ஆண்டில், அதாவது 1972-இல், ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டச் செயலாளராக கா.மு.கதிரவனை உயர்த்தினார் கலைஞர். மீண்டும் 1980-ஆம் ஆண்டு, திருச்செந்தூர் தொகுதியில் போட்டியிட கலைஞர் வாய்ப்பு வழங்கினார். ஆனால், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட அ.தி.

> **"கா.மு.கதிரவன் என்றால், தெரியாதவர்கள் கழகத்தில் இருக்க மாட்டார்கள். அதுதான் அவரின் சிறப்பு. அதுதான் கழகத்தின்மீது அவர் கொண்டிருந்த பற்றின் சிறப்பு."**

கடின உழைப்பு. செல்வந்தர் வீட்டு சீமானாக அவர் ஒருநாளும் இருந்ததில்லை. கழகக் கண்மணியாக வீதி வீதியாகச் சென்று இயக்கத்திற்காக வியர்வை சிந்தி உழைத்தார். தொழுகைக்குக்கூட செல்ல மாட்டார், ஆனால், கழகக் கூட்டங்கள் என்றால், கரை வேட்டியோடு செல்லாமல் இருக்க மாட்டார். ஒருகட்டத்திற்குப் பிறகு தன் சொந்த செலவிலேயே உள்ளூரில் நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்தத் தொடங்கினார். வெளியூர்களுக்குச் சென்று, கிடைத்த இடத்தில் தங்கி, கிடைத்ததை உண்டு, நாள், நேரம் பார்க்காமல் உழைத்த உழைப்புக்குக் கிடைத்த வெகுமதிதான், அண்ணாவும் கலைஞரும் கொடுத்த வாய்ப்புகள்.

அவர் ஒரு முஸ்லிமாக இருந்தாலும் அவரை இஸ்லாமியர்களின் பிரதிநிதியாக அண்ணாவும் கலைஞரும் பார்க்கவில்லை. மாறாக, தன்னை தி.மு.கழகத்தின் பிரதிநிதியாக இஸ்லாமிய மக்களுக்கு அறியப்படுத்திக் கொண்டவர் கா.மு.கதிரவன். அந்த உழைப்பு அவரோடு நின்றுவிடாமல், அவருடைய மறைவுக்குப் பிறகு குடும்பத்தினராலும் தொடர்ந்தது. இயக்கத்திற்காக உழைப்பதையே முதல் கடமையாக அவரும், அவருடைய குடும்பத்தினரும் கொண்டிருந்தனர்.

முஸ்லிமாகப் பிறந்தவருக்கு மற்ற எந்த அரசியல் இயக்கத்தையும்விட தி.மு.கழகம் தனித்துவமானது, உணர்வுமயமானது என்பதைப் புரிந்துகொள்ள எவரும் அறிந்து கொள்ளவேண்டிய வரலாறு, கா.மு.கதிரவன். இன்றைக்குப் பலருக்கும் அவருடைய இயற்பெயரான சம்சுதீன் என்பதுகூட நினைவில் இருக்காது. ஆனால், கா.மு. கதிரவன் என்றால், தெரியாதவர்கள் கழகத்தில் இருக்க மாட்டார்கள். அதுதான் அவரின் சிறப்பு. அதுதான் கழகத்தின்மீது அவர் கொண்டிருந்த பற்றின் சிறப்பு.

...நீளும்

## வரலாறு திருத்தி எழுதும்!

தமிழ்நாட்டின் 17-வது சட்டமன்றத்தில், ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்போது, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்கள், அரசின் 40 நாட்கள் செயல்பாடுகள்மீது ஆக்கபூர்வமாகக் கேள்விகளை முன்வைத்தார். அதற்குப் பதிலளித்துப் பேசிய முதலமைச்சர் விஜய், சட்டமன்ற மாண்புகளைக் கேலிக்கூத்தாக்கும் வகையில், தனது செயல்பாடுகளால் தரம் தாழ்ந்தார். அதுகுறித்து, சமூக வலைதளங்கள் எங்கும் கடும் விமர்சனங்கள் எழுப்பப்பட்டன. எழுத்தாளர் பா.பிரேம் என்பவரின் இந்தப் பதிவு, பலராலும் பகிரப்பட்டு வீடியோவாகவும் வெளியாகி இருக்கின்றது.

"மு.க.ஸ்டாலின் செயல்படுத்திய திட்டங்களைவிட ஒன்று அதிகமாக...

மு.க.ஸ்டாலின் கட்டிய நூலகங்களைவிட ஒன்று அதிகமாக...

மு.க.ஸ்டாலின் கட்டிய மருத்துவமனைகளைவிட ஒன்று அதிகமாக...

மு.க.ஸ்டாலின் கட்டிய அருங்காட்சியங்களைவிட ஒன்று அதிகமாக...

மு.க.ஸ்டாலின், பி.ஜே.பி. அரசின் நெருக்கடிகளை எதிர்த்து நின்றதைப் போல...

மு.க.ஸ்டாலின் உயர்த்திய பொருளாதார நிலையில் இருந்து மேலும் உயர்வானதாக...

இவற்றிலெல்லாம், ஏதேனும் ஒன்று... ஒன்றில் மு.க.ஸ்டாலினைத் தாண்டிவிட்டு, வாய் பேசுங்கள் முதல்வரே...

தேர்தல் வெற்றி மட்டுமே உங்களைத் தலைவர் ஆக்கிவிடாது... நன்னடத்தையும் செயல்பாடும்தான் உங்கள் தகுதியைத் தீர்மானிக்கும். சினிமாவில் 'போக்கிரி'யாக இருந்தால், மக்கள் ரசிப்பார்கள். அரசியலில் 'போக்கிரி'களை மக்கள் ரசிக்க மாட்டார்கள்" என்று அவர் பதிவிட்டுள்ளார்.

வீடியோவாக, கழகத் தலைவர் கொண்டுவந்த ஒவ்வொரு திட்டங்களாக விரிகையில், அதைக் காண்பவர் நெஞ்சமெல்லாம் கலங்கும். வரலாறு எல்லாவற்றையும் திருத்தி எழுதும்.

## ஃப்ளாஷ்பேக்


கே.வி.ராஜ்குமார்



### தென்னிந்தியா என்றாலும் திராவிடம் என்றாலும்...

2017-ஆம் ஆண்டில், தமிழ்நாடு கரும்பு விவசாயிகளின் கோரிக்கைகளுக்குத் தீர்வு காண, சென்னை சேப்பாக்கத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த முடிவுசெய்தோம். அதற்கு ஆதரவு கேட்டு முத்தமிழறிஞர் கலைஞர், அன்றைய செயல் தலைவர் தளபதி, இன்றைய கழகத் தலைவர் ஆகியோரிடம் ஆதரவு கேட்டு சென்றிருந்தோம். அந்த கண்டன ஆர்ப்பாட்டம் தொடர்பாக நாங்கள் வெளியிட்டிருந்த அறிக்கையை ஏற்கெனவே வாசித்ததாகக் கூறி, தலைவர் வியப்பளித்தார். 'தென் இந்திய கரும்பு விவசாயிகள் சங்கம்' என்கிற பெயரைச் சுட்டிக்காட்டி, 'தென்னிந்தியா என்றாலும் திராவிடம் என்றாலும் ஒன்றுதான்' என்று குறிப்பிட்டுப் பேசியதுடன், கழகத்தின் சார்பில், அந்த ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவளிப்பதாகவும் தலைவர் அறிவித்தார்.

**– கே.வி.ராஜ்குமார், கழகத் தலைமைச் செயற்குழு உறுப்பினர், தலைவர், தென் இந்திய கரும்பு விவசாயிகள் சங்கம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### தவளைகளின் கூச்சல்!

1964-ஆம் ஆண்டு 'காஞ்சி' இதழில், கழகத்துக்கு எதிராக அவதூறு பரப்புபவர்களுக்குப் பதிலளிக்கும் விதமாகக் கடிதம் எழுதினார், பேரறிஞர் அண்ணா. "தம்பி, பெருமழையால் ஏரி, குளம், குட்டைகள் நிரம்பி எங்கும் சேறும் சகதியுமாகிவிட்டால், தவளைக் கூட்டத்துக்குக் கொண்டாட்டமல்லவா! கேட்போர் காதினைத் துளைத்திடத் தக்க கூச்சல் எழுப்பும், தூக்கத்தைக் கெடுக்கும், எத்தனை பெரிய சத்தம்! ஓயாத கூச்சல்! காதைத் துளைத்திடும் சத்தம்! என்ன எண்ணிக்கொண்டன, இந்தத் தவளைகள்! கூச்சலிடு வதிலே நம்மை மிஞ்சுவார் எவரும் இல்லை என்று எண்ணிக் கொண்டு, மண்டைக்கனம் கொண்டுவிட்டனவோ!" என்று குறிப்பிட்டிருப்பார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900